**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | : | **P.W.7** |
| **Name** | : | டாக்டர்.பாண்டியன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.06.2023.**

முதல் விசாரணை -

நான் தற்போது அரசு விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை துறையில் பேராசிரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.7.2011 அன்று உதவி பேராசிரியராக செங்கல்பட்டு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்தபோது செல்வராஜ், குமாரி, லட்சுமிதேவி என்று அழைக்கப்படும் மூன்று நபர்கள் தங்களை அடையாளம் தெரிந்த பத்து நபர்கள் கட்டை மற்றும் கத்தியால் அரும்பாக்கத்தில் அடித்துவிட்டதாக கூறி விபத்து பதிவேடு டாக்டர் ரவி அவர்களால் பதியப்பட்டு என்னிடம் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டவர்களை நான் ஆவணங்களை பரிசீலனை

செய்தேன். டாக்டர் ரவி அவர்கள் காயம்பட்ட செல்வராஜ், குமாரி மற்றும் லட்சுமிதேவி ஆகியோர்களுக்கு விபத்து பதிவேடு பதிவு செய்திருந்தார். டாக்டர் ரவி அவர்களின் கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு பரிச்சயம். டாக்டர் ரவி வழங்கிய விபத்து பதிவேடுகள் முறையே அ.சா.ஆ.3 முதல் 5.

விபத்து பதிவேட்டின் அடிப்படையில் திரு.செல்வராஜ் அவர்களை பரிசோதித்தபோது அவருக்குண்டான காயங்கள் பின்வருமாறு,

தலையின் முன்பகுதியில் 1x8x0.5 அளவில் உள்ள ஏற்கனவே தையல் போடப்பட்ட காயமும், வலது முன் கையில் அடிப்பட்ட வீக்கமும் இருந்தது. அவருக்கு தலைக்குண்டான நுண்கதிர்படம் எடுக்கப்பட்ட பரிசோதனை செய்து அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்குண்டான காயம் என்னால் சாதாரண காயம் அல்லது சொற்ப காயம் என சான்று அளிக்கப்பட்டது. செல்வராஜிற்கு நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.6.

குமாரி என்பவரை பரிசோதித்ததில் அவருக்குண்டான காயம் பின்வருமாறு.

வலது முழங்கையில் 1x1x0.5 செ.மீ அளவில் உள்ள கிழிந்த காயமும் மற்றும் நெஞ்சில் தொடு வலியும் இருந்தது. அவருக்கு நெஞ்சு மற்றும் கழுத்தில் நுண்கதிர்படம் எடுக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்குண்டான காயம் என்னால் சாதாரண காயம் அல்லது சொற்ப காயம் என சான்று அளிக்கப்பட்டது. குமாரிக்கு நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.7.

லட்சுமிதேவி என்பவரை பரிசோதித்ததில் அவருக்குண்டான காயம்

<u>பின்வருமாறு</u>.

நெஞ்சு மற்றும் வலது தோள்பட்டை மற்றும் இடது கையில் தொடு வலியும் வீக்கமும் இருந்தது. அவருக்கு வலது தோள்பட்டை, இடது கை மற்றும் வலது முழங்கால் ஆகிய இடங்களுக்கு நுண்கதிர்படம் எடுக்கப்பட்டு எலும்பு மூட்டு அறுவைசிகிச்சை மருத்துவர் ஜே. தர்மராஜ் அவர்களிடம் கருத்து பெறப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

டாக்டர் ஜே. தர்மராஜ் அவர்கள் லட்சுமிதேவி அவர்களுக்குண்டான காயம் கொடுங்காயம் என சான்று அளித்துள்ளார். டாக்டர் தர்மராஜ் என்பவரின் கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு பரிச்சயம். லட்சுமிதேவிக்கு வழங்கப்பட்ட <u>காயச்சான்று அ.சா.ஆ.8.</u> மேற்படி டாக்டர் தர்மராஜ் பணியில் இருந்து 5 வருடத்திற்கு முன்பு சென்றுவிட்டார்.

செல்வராஜிற்கு போடப்பட்டிருந்த தையல் காயத்தை குறித்து கேட்டபோது அவர் வந்தவாசி அரசு மருத்துவமனையில் தையல் போடப்பட்டதாக தெரிவித்தார். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1,2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

டாக்டர் ரவி அவர்கள் தற்போதும் செங்கல்பட்டு மருத்துவமனையில் பணியில் உள்ளார். விபத்து பதிவேட்டில் நான் எந்த மாதிரியான சிகிச்சை அளித்தேன் என்பது குறித்து பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்யவில்லை. அதற்கான சிகிச்சை பதிவேடு மருத்துவமனையில் இருக்கும்.

நான் எந்தவொரு குறிப்பும் விபத்து பதிவேட்டில் செய்யாமல் காயத்தை

குறித்து என்னால் கருத்து தெரிவிக்க முடியாது என்றால் சரியல்ல. டாக்டர் ரவி அவர்களின் பணியானது எங்கள் மருத்துவமனையில் பொறுத்து சிகிச்சை பெறவரும் நபர்களுக்கு முதலுதவி கொடுத்து விபத்து பதிவேடு அளிப்பது மட்டும் தான்.

காயங்களுக்கான தொடர் சிகிச்சை எங்களால் வழங்கப்பட்டு காயச்சான்று வழங்குவது எங்களுடைய பணியாகும். அதன்படி இவ்வழக்கில் விபத்து பதிவேடு பதிவு செய்தபிறகு என்னிடம் அனுப்பப்பட்ட செல்வராஜ், குமாரி மற்றும் லட்சுமிதேவி ஆகியோர்களுக்கு நான் சிகிச்சை மற்றும் தொடர்சிகிச்சை அளித்து அதற்கான பதிவுகளை கேஸ் ஷீட்டில் பதிவு செய்து விபத்து பதிவேட்டில் காயம் பற்றிய முடிவு மட்டும் பதிவு செய்யப்பட்டது. காயச் சான்றிதழில் எப்போது அனுமதிக்கப்பட்டு எப்போது விடுவிக்கப்பட்டனர் என்ற குறிப்பு நான் தான் எழுதியுள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் ராதா, தனலட்சுமி, கன்னியம்மாள் மற்றும் மாரிமுத்து ஆகியோர்களின் மருத்துவ விடுவிப்பு சான்றிதழில் உள்ள கையெழுத்தும் கையொப்பமும் யாருடையது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

( மருத்துவ சாட்சியிடம் கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீங்கள் சிகிச்சையே செய்யவில்லை என்றும், உடன் பணிபுரிந்த டாக்டர் ரவியின் கையொப்பம் உங்களுக்கு தெரியாது என்றும் கேள்விகள் கேட்டதற்கு நீதிமன்றத்தால் அந்த கேள்விகளுக்கு பதில் பதிவு செய்ய மறுக்கப்பட்டது. )

நான் சிகிச்சை அளித்த நபர்கள் ஏற்கனவே சிகிச்சை பெற்றதற்கான குறிப்பு விபத்து பதிவேட்டில் உள்ளதா என்றால் இல்லை. வந்தவாசி அரசு

மருத்துவமனையில் இருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டதற்கான குறிப்பு விபத்து பதிவேட்டில் உள்ளதா என்றால் இல்லை.

சிகிச்சை அளித்த நபர்கள் குறித்த விவரங்களை நானோ டாக்டர் ரவியோ காவல்துறைக்கு தகவல் கொடுத்ததற்கான பதிவு உள்ளதா என்றால் அதுகுறித்த குறிப்பு விபத்து பதிவேட்டிலோ, காயச்சான்றிலோ வராது. விபத்து பதிவேட்டில் காவல் துறை தகவல் குறித்த காலம் உள்ளது என்றால் சரி தான். அந்த காலத்திற்கு பதில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரி தான்.

செல்வராஜிற்கு வலது தலையிலா, இடது தலையிலா தையல் போட்ட காயம் என்று குறிப்பு உள்ளதா என்றால் நெற்றி என்று சொல்லப்பட்டுள்ளது. வலது இடது என்று குறிப்பிடப்படவில்லை. வலது முன்னங்கை என்பது எந்த பகுதி என்றால் முன்னங்கை என்று தான் சொல்லப்பட்டுள்ளது. பகுதி சொல்லப்படவில்லை. செல்வராஜிக்கு ஏற்பட்ட தலை காயம் ஒரு முள் குத்தினால் கூட ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு.

குமாரிக்கு ஏற்பட்ட கிழிந்த காயம் தகரம் போன்ற ஆயுதத்தினால் மோதுவதாலும், கீறுவதாலும் ஏற்படவாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. தொடு வலி என்பதை காயம்பட்ட நபர் பாசாங்கிற்கு கூட சொல்லலாம் என்றால் சரி தான். லட்சுமிதேவியின் சிகிச்சையான நுண்கதிர் நிபுணர் அறிக்கை பெறப்பட்டதா என்றால் பெறப்படவில்லை. காரணம் லட்சுமிதேவிக்கு சவ்வு கிழிந்தது என்பதால் நுண்கதிர் நிபுணரின் அறிக்கை அவசியமற்றதாகிவிட்டது.

**நுண்கதிர்நிபுணர் நான் இல்லை. நுண்கதிர் பொறுத்த கருத்து என்னால் தெரிவிக்க முடியாது என்றால் சரியல்ல.**

**8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.